# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## இலங்கை புகையிரத சேவைகள்

## 20,000,000 எண்ணிக்கையான வெற்று பயணிகள் பயணச்சீட்டுகளை வழங்குவதற்கான பெறுகை

**பெறுகை இல. SRS/F.8154**

01. இலங்கை புகையிரத சேவைகள் திணைக்கள கொள்வனவுக் குழு (மேஜர்) தவிசாளர், இலங்கை புகையிரத சேவைக்கு 20,000,000 எண்ணிக்கையான வெற்று பயணிகள் பயணச்சீட்டுகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த தயாரிப்பாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வார். விலைமனுதாரர்கள் தங்களது விலைமனுக்களை நேரடியாக அல்லது அற்றோணித் தத்துவம் அளிக்கப்பட்டவர்களுமான அதிகாரமளிக்கப்பட்ட இலங்கையில் பதிவு செய்யப்பட்ட முகவர்களின் ஊடாகச் சமர்ப்பிக்கலாம்.

02. சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் (ICB) நடைமுறை மூலம் விலைக்கோரல்கள் மேற்கொள்ளப்படும்.

03. பின்வரும் முகவரியிலிருந்து 2026-04-10ஆம் திகதி முதல் 2026-06-04ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

**பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்),**
**புகையிரத பெறுகைகள் உப திணைக்களம்,**
**ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-10. இலங்கை.**

| | |
|---|---|
| **தொலைபேசி** | **: 94 (11) 2438078 அல்லது 94 (11) 4600202** |
| **தொலைநகல்** | **: 94 (11) 2432044** |
| **மின்னஞ்சல்** | **: srs.slr@gmail.com / tender1.srs@gmail.com** |
| **இணையதளம்** | **: www.railway.gov.lk** |

04. விலைமனுதாரர்கள் குறைந்தபட்சம் 5 மில்லியன் எண்ணிக்கையிலான பொருட்களை வழங்குவதற்கான கொள்ளளவு மற்றும் தகுதிக்கான ஆவணச் சான்றுகளை, இந்த விலைமனு ஆவணத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரக்குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வதேசத் தரங்களுக்கு ஏற்ப, கடந்த ஐந்து வருடங்களில் ஏனைய நிறுவனங்களுக்கு அப்பொருட்களை அல்லது அதுபோன்ற பொருட்களை வழங்கியதற்கான கடந்தகாலப் பதிவுகளுடன், வழங்கப்பட்ட பொருட்களின் செயல்திறன் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும். பயனர் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடந்தகால விநியோகப் பதிவுகள் தெளிவானதாகவும், சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களின் பிரதிகள் தெளிவாகவும் வாசிக்கக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

05. மீளளிக்கப்படாத கட்டணமாக 16,200.00 ரூபா அல்லது அதற்குச் சமனான இலகுவில் மாற்றக்கூடிய பணத்தை 2026-04-10ஆம் திகதி முதல் 2026-06-04ஆம் திகதி வரை பி.ப. 3.00 மணி வரையில் அல்லது 2026-06-04ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையில் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களுக்குச் செலுத்துவதன் பேரில் இலங்கையில் கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத பெறுகைகள் உப திணைக்கள அலுவலகம், பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அவர்களுக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

06. சகல விலைமனுக்களுடனும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட 750,000.00 ரூபா பெறுமதியுடைய நிபந்தனையற்ற உத்தரவாதமாக விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

07. விலைமனுக்கள் 2026-06-05ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்கள் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடன் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு (மேஜர்),**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-10. இலங்கை**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (மேஜர்),**
**இலங்கை புகையிரத சேவைகள்.**

**Ref No. SRS/F.8154**